பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.109 நாள்: 03.08.2019

**காஞ்சிபுரம் மாவட்டம் வரதராஜ பெருமாள் கோயிலில் அருள்மிகு அத்திவரதர் வைபவம் நடைபெற்று வருவதை முன்னிட்டு காஞ்சிபுரம் பெருநகராட்சியில் துப்புரவு மற்றும் குடிநீர் வழங்கும் பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக ரூ.25 இலட்சம் நன்கொடை வழங்கப்பட்டுள்ளது என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.**

=====

காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயிலில் 40 ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறும் ஆதி அத்திவரதர் வைபவம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை 48 நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. அருள்மிகு அத்திவரதர் 01.07.2019 முதல் 31.07.2019 வரை பக்தர்களுக்கு சயன கோலத்தில் அருள்பாலித்தார். 01.08.2019 முதல் 17.08.2019 வரை நின்ற கோலத்தில் அருள்பாலித்து வருகிறார்.

அத்திவரதரை தரிசிக்க வெளிநாடுகள், வெளிமாநிலம் என பல பகுதிகளிலிருந்து நாளொன்றுக்கு சராசரியாக 1.5 இலட்சம் பக்தர்களும், விடுமுறை தினங்களில் 3 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்களும் வருகை புரிகின்றனர். இதுநாள் வரை அருள்மிகு அத்திவரதரை சுமார் 44லட்சம் பக்தர்கள் தரிசித்துள்ளனர். இவ்வைபவத்திற்கு வருகை புரியும் லட்சக்கணக்கான பக்தர்களுக்கு தேவையான வாகன நிறுத்த வசதி, தற்காலிக பேருந்து நிலையங்கள், சுகாதாரம், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, குப்பைகள் மற்றும் இதர கழிவுகளை அகற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்வது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23.07.2019 அன்று திருக்கோயிலுக்கு நேரிடையாக சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்கு பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அருள்மிகு அத்திவரதரின் வைபவத்தை தரிசிக்க வரும் பக்தர்களின் தேவையை கருத்தில் கொண்டு அன்னதானம் வழங்குவதற்காக தனது சொந்த பணத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கி, அன்னதானத்திற்கு நிதி வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

**காஞ்சிபுரம் மாவட்டம் அத்திவரதர் வைபவம் நிகழ்ச்சிக்கு வருகை புரியும் பொதுமக்களுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படை வசதிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் இன்று (03.08.2019) அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயில் நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் பெருநகரத்திற்கு வருகை புரியும் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, திடக்கழிவுகளை அகற்றுதல், போக்குவரத்து வசதி, தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைத்தல், தற்காலிக நான்கு சக்கர / இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடங்கள் மற்றும் மருத்து வசதிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் விரிவாக கேட்டறிந்தார். மேலும், பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் இப்பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து உடனடியாக நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

**காஞ்சிபுரம் அருள்மிகு அத்திவரதரின் வைபவத்தை காணவரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட அன்னதான திட்டத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் மூலம் பல்வேறு நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூ.25 இலட்சத்திற்கான காசோலைகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பி.பொன்னையா, இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்.** அப்பொழுது பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் செயற்பொறியாளர் திரு.முருகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**இக்கூட்டத்திற்கு பின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,**

காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயிலில் 40 ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறும் ஆதி அத்திவரதர் வைபவம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை 48 நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அத்திவரதரை தரிசிக்க நாளொன்றுக்கு பல இலட்சம் பக்தர்கள் வருகை புரிகின்றனர். இப்பக்தர்கள் வசதிக்கென காஞ்சிபுரம் நகராட்சி நிர்வாகத்தினால் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, குப்பைகள் மற்றும் இதர கழிவுகளை அகற்றுதல் உள்ளிட்ட பல பணிகள் நகராட்சி நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மேலும், இப்பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு.கே.பாஸ்கரன், இ.ஆ.ப., தோட்டக்கலைத் துறை இயக்குநர் டாக்டர்.என்.சுப்பையன், இ.ஆ.ப., காஞ்சிரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பி.பொன்னையா, இ.ஆ.ப., ஆகியோர் மேற்பார்பையில் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் திரு.இளங்கோவன் தலைமையில் 4 நகராட்சி நிர்வாகம் மண்டல இயக்குநர்கள், 15 நகராட்சி ஆணையாளர்கள் அடங்கிய சிறப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை மேற்கொள்ளவும், பாதுகாப்பு பணிகளை கண்காணிக்கவும் 12 வட்டாட்சியர்கள் / வட்டார வளர்ச்சி அலுவலர்களை கொண்டு காவலர்கள் உதவியுடன் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.**

திரளாக வரும் பக்தர்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய ஏற்கனவே காஞ்சிபுரம் நகராட்சியின் மூலம் தினசரி வழங்கப்பட்டு வரும் 180 இலட்சம் லிட்டர் குடிநீருடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வேலூர் கூட்டுக்குடிநீர் திட்டத்திலிருந்து 20 இலட்சம் லிட்டர் குடிநீர் கூடுதலாக பெறப்பட்டு தினசரி சுமார் 200 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. பக்தர்கள் வசதிக்கென நகரின் பல முக்கிய சாலைகள் மற்றும் பொது இடங்களில் 100 குடிநீர் தொட்டிகள் அமைக்கப்பட்டு லாரிகள் மூலம் குடிநீர் நிரப்பப்பட்டு குடிநீர் வழங்கப்படு வருகிறது.

மேலும், திருக்கோயில் வளாகத்திற்குள்ளும், மாட வீதிகளிலும் தரிசனத்திற்காக வரிசையில் காத்திருக்கும் பக்தர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 3000 எண்ணிக்கையிலான 20 லிட்டர் கேன்கள் மூலம் 120 பணியாளர்களைக் கொண்டு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென கோயில் வளாகம் உள்ளிட்ட 5 இடங்களில் சவ்வூடு முறையில் சுத்தகரிக்கும் (Reverse Osmosis) குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.46.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

பக்தர்கள் அதிகமாக கூடும் கோயில் வளாகம், மாட வீதிகள், தற்காலிக பேருந்து நிலையங்கள், முக்கிய சாலைகள் உள்ளிட்ட இடங்களில் 350 தற்காலிக கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. கோயில் வளாகத்திற்குள் 42 கழிப்பறைகளும், உடல் ஊனமுற்றோருக்கு தனியே 4 கழிப்பறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பக்தர்கள் தரிசனத்திற்காக காத்திருக்க மிக பெரிய கூடங்கள் வடக்கு மாட வீதி மற்றும் பெரிய தோட்டம் பகுதிகளில் கூடுதலாக 120க்கும் அதிகமான கழிப்பறைகள் நிறுவப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டில் உள்ளது. இக்கழிப்பிடங்களுக்கு தேவையான தண்ணீர் அந்தந்த பகுதிளிலேயே எடுக்கும் வகையில் 10 புதிய ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் தடையின்றி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் மற்றும் கழிப்பறைகள் அமைந்துள்ள இடங்களை பொதுமக்கள் தெரிந்துக்கொள்ள போதுமான எண்ணிக்கையில் வழிகாட்டிப் பலகைகள் (Sign Boards ) வைக்கப்பட்டுள்ளன.

மேலும் வரதராஜ பெருமாள் கோயில் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் சேகரமாகும் திடக்கழிவுகளை உடனுக்குடன் அகற்ற காஞ்சிபுரம் நகராட்சி பணியாளர்கள் மற்றும் தமிழகத்தின் பிற நகராட்சிகள், மாநகராட்சிகளிலிருந்து தருவிக்கப்பட்ட 2 நகர்நல அலுவலர்கள் 4 துப்புரவு அலுவலர்கள் 25 துப்புரவு ஆய்வாளர்கள் 49 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் 1200 துப்புரவு பணியாளர்கள் சுழிற்சி முறையில் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றனர். இப்பணிக்களுக்காக 30 டிப்பர் லாரிகள், 40 சிறிய டிப்பர் லாரிகள் 120 பேட்டரி வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் நகரில் ஏற்கனவே அகற்றப்பட்டு வரும் சுமார் 70 டன் திடக்கழிவுகளுடன் கூடுதலாக 25 டன் திடக்கழிவுகள் நாள்தோறும் அகற்றப்பட்டு வருகிறது.

சுகாதார பணிகளுக்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், தளவாட சாமான்கள், சுகாதார பணியாளர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியன போதுமான அளவில் வாங்கி இருப்பு வைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 30 சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு இதுநாள் வரை சுமார் 40,000 மேற்பட்டோருக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. 10 எண்ணிக்கையிலான 108 ஆம்புலன்ஸ், 9 நடமாடும் மருத்துவ குழுக்கள், 10 இருசக்கர வாகன ஆம்புலன்ஸ் போன்ற சேவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதியோர் மற்றும் கர்பணிதாய்மார்களுக்கு என தனி வரிசை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவர்களை அழைத்து செல்ல ஏதுவாக 1250 இருசக்கர நாற்காலிகள், 12 பேட்டரி கார்கள் இயக்கப்படுகின்றன.

நகராட்சி எல்லைக்குள் சேதமடைந்த 10 கி.மீ.தூரம் உள்ள சாலைகள் ரூ.110 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டு பொதுமக்களின் போக்குவரத்துவசதி மேம்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் சார்பில் ஐந்து தற்காலிக பேருந்து நிலையங்கள், மூன்று கார் மற்றும் வேன் நிறுத்தம் இடங்கள் அமைக்கப்பட்டு, அதில் பக்தர்கள் வசதிக்கென தேவையான பயணியர் நிழற்கூடை, இருக்கை வசதிகள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, பொருட்கள் வைக்கும் அறை ஆகியன ரூ.68.30 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

01.08.2019 முதல் அருள்மிகு அத்திவரதர் சயன நிலையிலிருந்து நின்ற நிலையில் தரிசனம் தருவதால், பக்தர்கள் வருகை அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, நிழற்கூடம் அமைப்புகளுடன் கூடிய 11 இருசக்கர வாகனம் நிறுத்தும் இடங்கள், ரூ.35 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்காலிக பேருந்து நிலையங்களிலிருந்து கோயில் அருகில் பொதுமக்களை கொண்டு சேர்க்க 45 சிறிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆட்டோக்களில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதை தவிர்க்க கட்டண விவரங்கள் அடங்கயி தகவல் பலகை அமைக்கப்பட்டுள்ளன. கோயில் வளாகத்திற்குள்ளும், மாட வீதிகளிலும், கோயிலைச் சென்றடையும் பிரதான சாலைகளிலும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு 400 க்கும் அதிகமான பிரகாசமான மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், பெரிய தோட்டம் மற்றும் வடக்கு மாடவீதி அண்ணா இல்லம் ஆகிய 2 இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின்விசிறி வசதி, மின்விளக்குகள் வசதியுடன் கூடிய சுமார் 20,000 எண்ணிக்கையிலான பக்தர்கள் தங்கும் வகையில் மிக பெரிய காத்திருப்பு கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு.கே.பாஸ்கரன், இ.ஆ.ப., தோட்டக்கலைத் துறை இயக்குநர் டாக்டர்.என்.சுப்பையன், இ.ஆ.ப., காஞ்சிரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பி.பொன்னையா, இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.கண்ணன், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்.சுந்தரமூர்த்தி, காஞ்சிபுரம் சார் ஆட்சியர் திரு.எஸ்.சரவணன், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வி.ஜெயக்குமார், இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையாளர் திரு.இரா.செந்தில்வேலவன், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் டாக்டர்.இளங்கோவன், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளர் திரு.சரவணன், அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயில் செயல் அலுவலர் திரு.தியாகராஜன், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் திரு.முஜீபுர் ரஹமான் (செங்கல்பட்டு), திரு.அசோக்குமார் (சேலம்), இணை இயக்குநர் திரு.அச்சய்யா, மண்டல செயற்பொறியாளர் திரு.வி.முருகேசன், நகராட்சி ஆணையாளர்கள் திரு.மதிவாணன் (பல்லாவரம்), திரு.கண்ணன் (பொள்ளாச்சி), திரு.லட்சுமணன் (தாராபுரம்), திருமதி விஜயகுமாரி (மறைமலைநகர்), திருமதி சித்ரா (திருவேற்காடு), திருமதி மாரிசெல்வி (திருவள்ளூர்), திரு.செல்வபாலாஜி (பண்ருட்டி), திரு.டிட்டோ (பூந்தமல்லி), திருமதி மல்லிகா (அனகாபத்தூர்), திருமதி தட்சிணாமூர்த்தி (செங்கல்பட்டு), திரு.நாராயணன் (மதுராந்தகம்), திருமதி ராஜேஸ்வரி (திருத்தணி), திரு.மகேந்திரன் (காஞ்சிபுரம்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**